(ஊ) ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (VCRs) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (VCRs) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1993). மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (VCRs) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைகாட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளபெறவேண்டும்."

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 31-12-1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 1. அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தவைவர் அவர்களே, நான்

"In clause 1, in sub-clause (1), *for* '1993', *substitute* '1994'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

• **மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.**

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (VCRs) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(எ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளியிடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண்.3/1994) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளியிடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1994) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 3-1-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS